பணித்திருக்கிறது. அந்த வகையிலே முதலாவதாக முடி கொண்டான் ஆறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடமும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். அதுவும் ஆய்வில் இருக்கின்றது. ஆய்வு முடிந்த பிறகு, சாதகமான சூழ்நிலை ஏற்படுமாயின் அவர்கள் விரும்பிய வண்ணம் அங்கே ஒரு 'பெட் டாம்' கட்டப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

எட்டுகுடியில் வடிகால் கட்டுதல்

202—(*வினா எண். 840) (திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டுகுடியில் வடிகால் வெட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக் குடியில் வடிகால் வெட்ட திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டுக்குடி வடிகால் சம்பந்தமாக 1984—வது ஆண்டில் காவிரி சீரமைப்பு கோட்டத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு செக்கிலியான் வாய்க்காலுடன் இணைப்பது என்று திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் படாமல் இருக்கின்றது. இந்த திட்டத்தை அரசு மேலும் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கு 1986—87 ஆம் ஆண்டு கடைமடை பகுதியிலிருந்து பாப்பனார் வடிகால் வரை ரூ. 5.50 லட்சம் செலவில் மேம்பாட்டு பணிகள் மற்றும் கீழ்குமிழ் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வடிகால் அபிவிருத்தி செய்தபோதிலும் மழைக்காலங்களில் தண்ணீரை வெளியேற்றுவதிலே ஒரு பெரும் பிரச்சினை இருக்கின்றது. எனவே தான் அந்தப் பிரச்சினை தீர அந்தக் கிராமத்து மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள சிவன் கோட்டம் வடிகாலையும் மேம்பாடு

1989 மே 4]

செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல மேல் பாதி வடிகாலினையும் அகலப்படுத்தி தூர் வாரி செக்கிலியான் வாய்க்காலுடன் இணைக்க இயலுமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஆய்வின் அறிக்கை வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்த ஆய்வுக்குழு அறிக்கை முடித்து அது சீரமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு அறிக்கை வந்தவுடன் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

203—(*வினா எண். 2107) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி ராஜா தோப்பில் அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 216 லட்சம் செலவில், அந்த மதிப்பீட்டில் உள்ள இத்திட்டத்தின் மூலம் 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்தி 426.83 டன்கள் ஆகும். நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் ஆகும்.